www.ecourtsindia.com

# குடும்பநல நீதிமன்றம் , பெரம்பலூர்.

## I.D.O.P.No.41/2021

**சாட்சி** : ம.சா.2 நாள்: 03.08.2022

**பெயர்** : **காணிக்கம்**

**குறுக்குவிசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்) :**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நானும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் சேர்ந்துதான் திருமணம் செய்துவைத்தோம். பெயர் பொருத்தம் மட்டும் பார்த்து இந்த திருமணம் செய்தோம். திருமண செலவு ரூ.4 இலட்சம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோம். திருமணம் முடிந்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் முதலிரவு எங்கள் வீட்டில் வைத்தோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து மூன்று நாட்கள் கழித்து தான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு விருந்திற்கு போனார்கள் என்றால் சரிதான். அந்த விருந்திற்கு நான் போகவில்லை. மூன்று நாட்கள் கழித்து விருந்திற்கு எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்ற மனுதாரரும் எதிர்மனுதாரரும் திரும்பிவந்துவிட்டார்கள் என்றாலும், மனுதாரர் மட்டும் திரும்பி வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரை எதிர்மனுதாரர் திட்டுவதும் அடிப்பதுமாக இருந்தார் என்று நான் முதல்விசாரணை வாக்குமூலத்தில் தேதி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரரை எதிர்மனுதாரர் கையால் அடித்து காலால் எட்டி உதைத்தாக நான் சொல்லியிருப்பது, திருமணம் நடந்து ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு நடந்தது. எதிர்மனுதாரர் திருமணம் ஆன ஒன்றரை வருட காலத்தில் மனுதாரரை அடிப்பதும், திட்டுவதுமாக இருப்பது குறித்தும், தாம்பத்ய உறவு வைத்துக்கொள்ள மறுத்துவருகிறார் என்றும் மனுதாரர் என்னிடம் சொல்லவில்லை. நான் என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர்மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து இதற்குமுன் காவல்நிலைய விசாரணையிலோ அல்லது சர்ச் விசாரணையிலோ ....//

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-4.pdf

www.ecourtsindia.com



எழுத்துமூலமாக எழுதிக்கொடுக்கவில்லை. வாய்மூலமாக சொன்னேன். என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் எதிர்மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 29/04/2020–ல் எதிர்மனுதாரரின் நகைகளை அன்னமங்கலம் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்திருப்பது குறித்து எனக்கு தெரியாது. நானும் என் மகன் மனுதாரரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து ஒரு வருடம் கழித்து மனுதாரரும் எதிர்மனுதாரரும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு போனார்களா என்று எனக்கு தெரியாது. என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டதாக சொல்லியுள்ளதில் எந்த தேதியில் நடந்தது என்று தேதி குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நிரஞ்சன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. திருமணம் முடிந்து ஒன்றரை வருடம் கழித்து மனுதாரர் மார்ட்டின் செல்வராஜ் மற்றும் மனுதாரரின் தகப்பனார் ஆகியோர் எதிர்மனுதாரரின் ஜாதகத்தை வாங்கிக்கொண்டுபோய் பார்த்தார்கள் என்றால் இல்லை. மனுதாரருக்கு மருந்து இருப்பதாக நாங்கள் அழைத்துச்சென்று மருந்து எடுத்துக்கொண்டுவந்தோம் என்றால் சரிதான். மனுதாரருக்கு மருந்து வைத்திருப்பதாகவும் எதிர்மனுதாரரின் ஜாதகம் சரியில்லை என்றும் நானும் என் கணவரும் மனுதாரருடன் எதிர்மனுதாரரை வாழவிடாமல் விரட்டி அடிடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. என் மகளிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

A DHANASEKARAN
Judge, Family Court
Digitally signed by A DHANASEKARAN
Location: Perambalur
Date: 2022.08.03 16:37:55 +1000

நீதிபதி,
குடும்பநல நீதிமன்றம்,
பெரம்பலூர்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-4.pdf